*மக்கள் ஆய்வகம்*

*வழங்கும்*

# உச்ச கட்டப் பிரச்சாரத்தில்

# திருவரங்கம் இடைத்தேர்தல் களம்

## ஆய்வு முடிவுகள்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*

4-8 பெப்ரவரி 2015

*ஊடகவியலார் சந்திப்பு:*

09 பெப்ரவரி 2015

*இடம்:*

சென்னை பத்திரிகையாளர் மன்றம்

அரசினர் தோட்டம், சென்னை 600 002

மக்கள் ஆய்வகம் வழங்கும்

# திருவரங்கம் இடைத்தேர்தல் களம்

## *உச்ச கட்டப் பிரச்சாரத்தில்*

### *ஆய்வகப் பின்னணி*

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கையுடன் மக்களின் உள்ளக் கிடக்கையை ஆய்வுப்பூர்வமாக அறிந்து, செயல்பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில், 2001 ஜனவரி தொடங்கி இதுவரை தமிழகம்-புதுவை மற்றும் தென்னிந்திய அளவில் 25-க்கும் மேற்பட்ட சுற்றுகளில் ஒரு லட்சம் கி.மீ.க்கு மேல் பயணம் செய்து பண்பாடு-அரசியல் தொடர்பான பேராய்வுகளை மேற்கொண்டுள்ளது. ஆய்வுகளை அடியொற்றிய கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் பரப்புரைகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. இதற்கெனத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், கருத்துக் கணிப்பியலில் முறையான பயிற்சிபெற்ற களஆய்வாளர் குழுக்களையும், பரப்புரைக்கெனக் கலைக் குழுக்களையும் ஒருங்கிணைத்து வருகிறது. கிராமப்புற இளைஞர், சிறார் மற்றும் மகளிரின் திறமைகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் கிராமிய ஆய்வு - பயிற்சி மையம் ஒன்றைக் கடந்த ஈராண்டுகளாக நடத்திவருகிறது.

### *ஆய்வு அணுகுமுறை*

வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்குச் சிறப்பு நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டதால் காலியான திருவரங்கம் தொகுதியில், இடைத்தேர்தல் களம் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், கட்சிகளின் தீவிரமான "பிரச்சாரத்திற்கு" மத்தியில் வாக்காளரின் மனநிலையை அறிய, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில், பெப்ரவரி 04 முதல் 08 மதியம் வரை தொகுதி முழுக்க நடைபெற்ற இந்த ஆய்வில், நன்கு பயிற்சிபெற்ற பத்துப் பேர் அடங்கிய மூன்று குழுக்கள் ஈடுபட்டன. 1925 பேரிடம் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பண்பாடு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது.

### *பங்கேற்றோர் பின்னணி*

ஆய்வில் பங்கேற்றோரில் ஆண்கள் 58, பெண்கள் 42. *வயதுரீதியாக,* புதிய வாக்காளர்கள் 4, வயது 30 வரை - 18, வயது 31 முதல் 45 வரை - 36, வயது 46 முதல் 60 வரை - 24 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்விரீதியாக,* படிக்காதவர்கள் - 20, ஆரம்பக் கல்வி வரை - 15, வகுப்பு 6 முதல் 12 வரை - 42, கல்லூரி அளவில் - 21. *தொழில்ரீதியாக,* கணிசமான அளவினர் சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் (32). பிறரில்: கூலி வேலை செய்வோர் (19), இல்லத்தரசிகள் (16), சொந்த விவசாயம் (9) மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் (8). *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 14, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 17, பிற்படுத்தப்பட்டோர் - 51, பிராமணர் - 8 (மீதி - தகவல்தர விரும்பாதவர்கள்). *மதரீதியாக,* மிகப்பெரும்பான்மையோர் (87) இந்துக்கள். கிறிஸ்தவர் - 8, இஸ்லாமியர் - 3.

### *ஆய்வு முடிவுகள்*

***(1) மிக முக்கியத் தேவை:*** திருவரங்கம் தொகுதியிலுள்ள தமது பகுதி / கிராமத்தின் மிக முக்கியத் தேவையாக மக்கள் முன்வைக்கும் முதல் அய்ந்து:

| | | | |
|---|---|---|---|
| சாலை/போக்குவரத்து வசதி | - 21 | சாக்கடை/கழிப்பிட வசதி | - 20 |
| குடிதண்ணீர் வசதி | - 16 | மருத்துவ வசதி | - 16 |
| விவசாயத்திற்குத் தண்ணீர் | - 9 | முறையான ரேஷன் விநியோகம் | - 6 |

*(2) தேவையை நிறைவேற்றும் கட்சி:* எந்தக் கட்சி வேட்பாளர் வென்றால் தமது பகுதியின் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்ற கேள்விக்கு யார் வென்றாலும் முடியாது என்ற பதிலே பெரும்பான்மை பெற்றாலும், ஆளும் கட்சியாக இருப்பதால் அதிமுக-வால் முடியும் என்ற பதிலும் வலுவாகப் பதிவாகியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| அதிமுக வென்றால் | - 39 | திமுக வென்றால் | - 14 |
| பாஜக வென்றால் | - 3 | சிபிஎம் வென்றால் | - 1 |
| **யார் வென்றாலும் முடியாது** | - 40 | | |

*(3) வாக்கு யாருக்கு?*

(அ) தற்போதுள்ள அரசியல் சூழலில், இன்று வாக்களிப்பதாக இருந்தால், மிகுந்த இடைவெளியுடன் அதிமுக முதலிடத்தில் உள்ளது. அவ்வாறே, இரண்டாம் இடத்திலுள்ள திமுக-வுக்கும் மூன்றாம் இடத்தில் வரும் பாஜக-வுக்கும் இடையே கணிசமான இடைவெளி உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| அதிமுக | - 58 | திமுக | - 19 |
| பாஜக | - 4 | சிபிஎம் | - 1 |
| பிறர் | - 2 | நோடா (NOTA) | - 4 |
| **முடிவுசெய்யாதோர் / முடிவு சொல்ல விரும்பாதோர்** | | | **- 12** |

(ஆ) முடிவுசெய்யாதோர் அல்லது தமது முடிவைத் தெரிவிக்க விரும்பாதோரின் மனநிலை பெரும்பாலும் திமுக-வுக்கும் சிறிதளவு பாஜக உள்ளிட்ட பிற கட்சிகளுக்கும் சாதகமாக இருப்பதை களச் சூழலின் அடிநீரோட்டம் உணர்த்துகிறது. எனினும், இதனால் முதலிரு இடங்களின் வரிசையில் மாற்றம் எதுவும் நிகழப்போவதில்லை.

(இ) வெவ்வேறு காரணிகளின் அடிப்படையில் வாக்குகள் பிரியும் விதத்தை நோக்குகையில், பால், வயது, கல்வி, தொழில், சாதி என அனைத்துத் தரப்பினரிடையிலும் பெரும்பான்மை ஆதரவுடன் அதிமுக மிக வலுவான முன்னிலை வகிக்கிறது. கீழ்வரும் சிறப்பம்சங்கள் கவனிக்கத்தக்கவை:

♦ படிக்காதவர்கள் மத்தியில் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கு செல்வாக்குடன் (72) அதிமுக கோலோச்சுகிறது. கல்லூரிக் கல்வி கற்றுள்ளோர் மத்தியில் பாஜக-வுக்கு ஒப்பீட்டளவில் சிறிதளவு அதிக ஆதரவும் (7), நோடாவுக்கு அதைவிடச் சற்று அதிக ஆதரவும் (13) வெளிப்படுகிறது.

♦ கூலிவேலை செய்பவர்களின் ஏகோபித்த ஆதரவு (71) அதிமுக-வுக்குச் செல்ல, சொந்தத் தொழில் செய்பவர்கள் மத்தியில் திமுக-வும் பாஜக-வும் அவர்களின் சராசரியை விடச் சிறிது அதிக ஆதரவைப் பெற்றுள்ளன (திமுக - 24, பாஜக - 7).

♦ பிராமணர்களின் வாக்கு மிகப் பெரும்பான்மை அதிமுக-வுக்குப் போனாலும், ஐயர்களின் வாக்கு சிறிது திமுக-வுக்கும் (11), பாஜக-வுக்கும் (6) செல்கிறது. ஆனால், ஐயங்கார்களின் வாக்கு ஒட்டுமொத்தமாக அதிமுக-வுக்கு மட்டுமே செல்கிறது.

♦ அதிமுக-வுக்கு அதன் சராசரியைவிடக் குறைந்த ஆதரவு (39) உடையார்களிடம் வெளிப்படுகிறது. இவர்களிடையே, நோடா-வுக்கும் சராசரியைவிட அதிக ஆதரவு (17) உள்ளது.

♦ முத்தரையர் மத்தியில் திமுக-வுக்கு அதன் சராசரியை விட அதிக ஆதரவு (25) வெளிப்படுகிறது.

♦ மதரீதியாக, நவம்பர் கணிப்போடு ஒப்பிடுகையில் மாற்றத்தைக் காணமுடிகிறது. இப்போதைய கணிப்பில் எல்லா மதத்தினரிடையிலும் அதிமுக முன்னிலை வகிக்கிறது (இந்து - 61, கிறிஸ்தவர் - 48, இஸ்லாமியர் - 83).

*(4) தேர்தல் எப்போது?* சொத்துக் குவிப்பு வழக்கு மற்றும் இடைத்தேர்தல் முடிவுகளைப் பொருத்து, தமிழகச் சட்டமன்றத்திற்கு முன்கூட்டியே தேர்தல் வரலாம் என்ற எண்ணம் தொகுதி முழுக்கப் பரவலாக நிலவுகிறது.

| | |
|---|---|
| சொத்துக் குவிப்பு வழக்கைப் பொருத்துத்தான் எதுவும் | 42 |
| இடைத்தேர்தல் முடிவுக்கேற்ப முன்கூட்டியே வரலாம் | 33 |
| 2016 ஏப்ரலில்தான் வரும் | 25 |

***(5) தேர்தல் அறம்:*** பணம்/பொருள் வாங்கிக்கொண்டு வாக்களிப்பதைக் குறித்து மக்கள் வெளிப் படுத்தும் அற உணர்வுக்கும் நடைமுறை எதார்த்தத்துக்கும் மிகத் தூக்கலாக வேறுபாடுள்ளது.

♦ பணம்/பொருள் வாங்குவது தவறு என்ற "கொள்கை அளவிலான" கருத்தைப் பெரும்பாலோர் (60) ஆதரித்தாலும், வலிய வந்து தரும்போது வாங்கிக்கொள்வதில் தவறில்லை என்பது மிக உறுதியாக (78) பதிவாகியுள்ளது.

♦ அவ்வாறே, இந்தத் தேர்தலில் பணம்/பொருள் விநியோகிக்கப்படுவது தமக்குத் தெரியும் என்றும் (95), தமக்குத் தரப்படும் பட்சத்தில் வாங்கிக்கொள்ளப் போவதாகவும் (86) மிகப் பெரும்பான்மையோர் தெரிவிக்கின்றனர்.

***(6) தேர்தல் முறை:*** தொகுதியில் தம்முடைய அனுபவத்தின் அடிப்படையில், தற்போதைய தேர்தல் முறையில் உள்ள மிகப் பெரிய குறைபாடாக மக்கள் சுட்டிக் காட்டுபவைகளில், வாக்குகளை விலைக்கு வாங்குவது முதலிடம் (48) பெறுகிறது. கள்ள ஓட்டுப் போடுவது (27), வாக்களிக்குமாறு மிரட்டுவது (15) ஆகியவை அதற்கடுத்த இடங்களைப் பிடிக்கின்றன.

## ***களத்தில் கண்டவை***

♦ தொகுதியைச் சேராத அதிமுக-வினரின் அளவுக்கதிகமான பிரசன்னம் தொகுதியையே திக்குமுக்காடச் செய்துள்ளது. நகரவீதிகள் தொடங்கி குக்கிராமச் சந்துகள் வரை படையெடுக்கும் கார்களின் தோரணை மக்களைப் பிரமிக்கவும் மிரளவும் வைக்கிறது.

♦ தொகுதியைச் சேராத கட்சிக்காரர்களில் பெரும்பாலோர், நாளின் பெரும்பகுதியை உண்டு குடித்து ஓய்வெடுப்பதில் செலவிடுகிறார்கள்.

♦ கிராம மக்களுக்கும் திருவிழாப் பாணியில் அதிமுக-வினர் விருந்து நடத்துவதைப் பரவலாகக் காணமுடிகிறது.

♦ "வாக்கு சேகரிப்பு" என்ற பெயரில் கட்சிக்காரர்கள் பெரும்பாலும் தெருக்களில் அணிவகுப்புச் செய்கிறார்களே தவிர, மக்களைப் பார்த்துப் பேசுவதில்லை. அதிமுக-வினரின் டாம்பீகமான அணிவகுப்பு, பல வாக்காளருக்கு ஒரு மறைமுக மிரட்டல் போலவே தென்படுகிறது.

♦ எல்லாக் கட்சியினரும் வாக்கு சேகரிக்கும் போது, ஊர்வலத்தின் முன்னணியில் கட்சிச் சின்னங்களை ஏந்திய சிறார்களை நிறுத்தி கோஷம்போடப் பயன்படுத்துகிறார்கள்.

♦ களத்திலுள்ள இரு பெரிய கட்சியினரும் மக்களைக் "கவனிப்பதில்" முனைப்போடு உள்ளனர். இதுவரை கணிசமான வாக்காளர்கள் பயனடைந்துள்ளது தெரிகிறது. இதுவரை "கவனிப்பு" வந்து சேராத வாக்காளரிடம் இன்னும் ஓரிரு நாள்களில் வந்துவிடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

♦ பல "நடுநிலை" வாக்காளர்கள் இரண்டு பெரிய கட்சிகளாலும் பயனடைந்துள்ளார்கள்.

♦ தொகுதியின் பல குக்கிராமங்களில் கணிசமான வாக்காளர்கள் "தேர்தல் ஆணையம்" குறித்து எதுவும் கேள்விப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள்.

♦ தேர்தல் ஆணையம் "பாதுகாப்பு" என்ற பெயரில் குவித்துள்ள துணைராணுவப் படை, கிராம மக்களுக்குத் தேவையற்ற அச்சத்தையும் பதட்டத்தையும் ஊட்டுவதாக உள்ளது.

♦ இத்தனை கெடுபிடிகள், பணவிரயத்தின் மத்தியில் இடைத்தேர்தல் நடத்துவதால் என்ன பயன் என்ற கேள்வியைத் தொகுதியில் ஆங்காங்கே கேட்க முடிகிறது.

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர், மக்கள் ஆய்வகம்
09 பெப்ரவரி 2015

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப் பட்டுள்ளதால், சதவீதங்களின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம். (3) சதவீதங்களின் பின்னங்கள் எல்லாம் முழு எண்களாகத் திருத்தப்பட்டுள்ளன.

**நன்றி**

## நீரோட்டம்:
### அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

***கள ஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்***

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது நீரோட்டம் என்ற இந்த நூல்.*

வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, *தேர்தல் பின்புலத்தில்* மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் நீரோட்டமும் ஒன்றாகத் திகழ்கிறது.

ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக இந் நூல் விளங்குகிறது.

*ஆசிரியர்:* ***ச.ராஜநாயகம்*** / *வெளியீடு:* ***மக்கள் ஆய்வகம்*** / ISBN: 978-81-910217-9-0

### POPULAR CINEMA AND POLITICS IN SOUTH INDIA
#### REIMAGINING MGR AND RAJINIKANTH

This work breaks new ground in the understanding of South Indian cinema and politics. Through incisive analysis and original concepts it illustrates the private, public and cinematic personas of MGR and Rajinikanth. It challenges the popular and scholarly myths surrounding them and shows the constant negotiation of their on-screen and off-screen identities. The book revisits the entire political history of post-Independent Tamil Nadu through its cinema, and presents a refreshing psycho-political and cultural map of contemporary South India. Replete with illustrative diagrams and graphs that lay bare the tropes of South Indian films, this work will be a major intervention in the understanding of Indian cinema.

This absorbing volume will be an important read for scholars, teachers and students of film studies, culture and media studies, and politics, especially those interested in South India.

***Author:*** **S. Rajanayagam** / ***Publisher:*** **Routledge** / ***ISBN:*** **978-1-13-882203-0**
*Visit:* http://www.routledge.com/books/details/9781138822030

*தொடர்புக்கு:*

**மக்கள் ஆய்வகம்**
122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094
**கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்**
பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்

செல்: 8870341318 (தலைமை அலுவலகம்) / 8870431319 (களப் பணியகம்)
மின்னஞ்சல்: peoplestudies@gmail.com
வலைத்தளம்: www.peoplestudies.in

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே"